**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 124/2019**
**Connected with OS.103/2019**

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 06.08.2025 | தகப்பனார் பெயர்: | பெருமாள் |
| பெயர்: | பன்னீர்செல்வம் (DW- 2 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | தொழுதூர் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 62 /2025 |

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 06.08.2025**</u>

1. இந்த வழக்கை குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் என்னென்ன உள்ளது என்றால் சர்வே எண்.19/1 நஞ்சை நிலம், சர்வே எண்.18/2 என்று உள்ளது. தாவா சொத்து இருக்கும் கிராமத்தில் நான் சுமாராக 55 வருடங்கள் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்திற்கு தெற்கு பக்கத்தில் எனது சொத்து உள்ளது. எனக்கு தெற்கு பக்கத்தில் மட்டும்தான் சொத்து உள்ளது ஆனால் மூன்று புறமும் சொத்து உள்ளதாக நான் பொய்யாக கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு என்பது திரிபுரசுந்தரியை எதிர்த்து ஜீவபாலன் வழக்கு தாக்கல் செய்துள்ளார். திரிபுரசுந்தரியை எதிர்த்து ஜீவபாலனை தவிர வேறு யாரேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. தாவா சொத்து என்பது சுமாராக 2 ½ ஏக்கர் இருக்கும். ஆனால் அது பற்றி நான் முதன்மை விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் திரிபுரசுந்தரி மற்றும் அவரது கணவரும் பிரச்சனை செய்ததாக

கூறியிருக்கிறேன் ஆனால் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து என்பது தேவஸ்தானத்திற்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு ஜுவபாலன் தேவஸ்தானத்திற்கு முறையான வரி செலுத்தி வருகிறார் என என் முதன்மை விசாரணையில் கூறியுள்ளேன். ஆனால் அதற்கான ஆவணம் ஏதும் நான் பார்த்ததில்லை. தாவா சொத்தின் நான்கெல்லை என்பது நடுகன்னிக்கு கிழக்கு, பொது கன்னிக்கு வடக்கு, திரிபுரசுந்தரி வயலுக்கு மேற்கு, சுந்தரம்பாள் நஞ்சைக்கு தெற்கு இதற்குட்டதாகும். ஜுவபாலனுக்கு நான் உறவினர் கிடையாது ஆனால் சின்ன வயதில் இருந்தே பழக்கம். நான் ஊர்காரர் என்ற முறையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>**

**<u>மறு விசாரணை இல்லை.</u>**